கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,

பெரியகுளம்.

அசல் வழக்கு எண். 110/2025 நாள். 09.04.2026

வாதி தரப்பு சாட்சி எண். 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அங்கையற்கண்ணி | ஊர் | : மதுரை |
| கணவர் பெயர் | : விக்னேஷ் | தாலுகா | : மதுரை |
| தொழில் | : மருத்துவர் | வயது | : 44/2026 |

ஆணையுறுதி சட்டப்படி சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

வாதி தரப்பில் 1 ம் சாட்சியின் முதல் விசாரணை:

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பில் நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 09.09.2016 ஆம் தேதியிட்டு நான் 1 ஆம் பிரதிவாதிக்கும், முத்துலெட்சுமி மற்றும் ஜனனி ஆகியோருக்கு எழுதி கொடுத்த பதிவு தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.5535/2016 **வா.சா.ஆ.1**

2. 01.09.2020 ஆம் தேதியிட்டு 1,2 பிரதிவாதிகள் மற்றும் முத்து லெட்சுமி ஆகியோருக்கு இடையே ஏற்படுத்தி கொண்ட பதிவு பாகப்பிரிவினை பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.4687/2020 **வா.சா.ஆ.2**

3. 09.01.2012 ஆம் தேதியிட்டு எனது மற்றும் 1 ஆம் பிரதிவாதியின் தந்தையான செல்வராஜ் என்பவரின் இறப்பு சான்றிதழின் ஜெராக்ஸ் நகல் **வா.சா.ஆ.3**

4. 29.02.2012 ஆம் தேதியிட்டு இறந்து போன எனது மற்றும் 1 ஆம் ஆம் பிரதிவாதியின் தந்தையான செல்வராஜ் என்பவருக்கு வழங்ககப்பட்ட வாரிசு சான்றிதழின் ஜெராக்ஸ் நகல் **வா.சா.ஆ.4**

5. 12.02.2021 ஆம் தேதியிட்டு இறந்து போன எனது மற்றும் 1 ஆம் பிரதிவாதியின் தாயார் முத்துலெட்சுமி என்பவரின் இறப்பு சான்றிதழின் ஜெராக்ஸ் நகல் **வா.சா.ஆ.5**

6. 22.05.2024 ஆம் தேதியிட்டு இறந்து போன எனது மற்றும் 1 ஆம் பிரதிவாதியின் தாயார் முத்துலெட்சுமி என்பவருக்கு வழங்கப்பட்ட சான்றிதழின் ஜெராக்ஸ் நகல் **வா.சா.ஆ.6**

7. 31.01.2021 ஆம்தேதியிட்டு எனது தாயார் முத்துலெட்சுமி என்பவர் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் cancer–க்காக அனுமதிக்கப்பட்டு அவர் இறந்த பிறகு அவர் பெயருக்கு வழங்கப்பட்ட death summary உண்மை நகல் **வா.சா.ஆ–7**

8. 14.03.2025 ஆம் தேதியிட்டு எனது தங்கை ஜனனி என்பவரின் இறப்பு சான்றிதழின் கணிணி நகல் **வா.சா.ஆ– 8**

9. 24.08.2020 ஆம் தேதியிட்டு எனக்கு 2 வது திருமணத்தில்பிறந்த பெண் குழந்தையான ஆத்விகா திரிநேத்ரா என்பவரின் பிறப்பு சான்றிதழ் கணிணி நகல் **வா.சா.ஆ. 9**

வாதி பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

(1,2 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.04.09 10:40:44 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.